## செய்தி வெளியீடு

**செய்தி வெளியீடு எண். 81/2024** **நாள் : 16.11.2024**

**சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் (CMRL) இந்திரா நகர் 2வது அவென்யூவில் குடிநீர் பிரதான குழாய் மாற்றி அமைக்கும் பணிகளை மேற்கொள்வதால் 18.11.2024 அன்று மாலை 07.00 மணி முதல் 19.11.2024 அன்று காலை 05.00 மணி வரை (10 மணி நேரம்) மண்டலம் 13 (அடையாறு) க்குட்பட்ட சில பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம்.**

**சென்னை குடிநீர் வாரியம் தகவல்**

சென்னை மெட்ரோ இரயில் நிறுவனம் (CMRL) இந்திரா நகர் 2வது அவென்யூவில் குடிநீர் பிரதான குழாய் மாற்றி அமைக்கும் பணிகளை மேற்கொள்வதால் **18.11.2024 அன்று மாலை 07.00 மணி முதல் 19.11.2024 அன்று காலை 05.00 மணி வரை (10 மணி நேரம்)** பள்ளிபட்டு குடிநீர் பகிர்மான நிலையத்தின் செயல்பாடுகள் தற்காலிகமாக நிறுத்தம் செய்யப்படும். ஆகையால் மண்டலம் 13 (அடையாறு) – க்குட்பட்ட கீழ்கண்ட பகுதிகளுக்கு குழாய்கள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது.

| மண்டலம் 13 (அடையாறு) | பகுதிகள் |
|---|---|
| வார்டு–169 (சைதாப்பேட்டை) | தாலுகா ஆபிஸ் ரோடு, வேளச்சேரி மெயின் ரோடு, சர்தார் பட்டேல் ரோடு, ஶ்ரீநகர் காலனி, ரங்கராஜபுரம், LDG சாலை, ஆரோக்ய மாதா நகர், வெங்கடாபுரம் |
| வார்டு–170 (கோட்டூர்புரம்) | கோட்டூர் கார்டன், கருணாநிதி 1வது மற்றும் 2வது தெருக்கள், திருவள்ளுவர் நகர், பொன்னியம்மன் கோயில் தெரு. |
| வார்டு–173 (அடையாறு) | வெங்கடரத்தினம் நகர், பெரியார் நகர் வள்ளுவர் நகர், காமராஜர் நகர் மேற்கு |
| வார்டு–174 (பெசண்ட் நகர்) | உரூர் குப்பம் , அருணாசலப்புரம் , சாஸ்திரி நகர் 1வது அவென்யூ, ஜீவரத்தினம் நகர், பரமேஸ்வரி நகர். |

| | |
|---|---|
| வார்டு–179<br>(பெசண்ட் நகர்/<br>திருவான்மியூர்) | லட்சுமிபுரம், ராஜ ஸ்ரீநிவாச நகர், குப்பம் கடற்கரை சாலை, காமராஜர் நகர், வேம்புலியம்மன் கோயில் தெரு, ஜெயராம் தெரு. |
| வார்டு–180<br>(திருவான்மியூர்) | சீவார்ட் சாலைகள், பாலகிருஷ்ணா ரோடு, திருவள்ளுவர் நகர், காமராஜர் நகர். |

எனவே, பொதுமக்கள் முன்னெச்சரிக்கையாக, வேண்டிய அளவு குடிநீரை சேமித்து வைத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.அவசரத் தேவைகளுக்கு லாரிகள் மூலம் (Dial for Water) குடிநீர் பெற்றுக்கொள்ள வாரியத்தின் https://cmwssb.tn.gov.in என்ற இணையதள முகவரியினை பயன்படுத்தி பதிவு செய்து பெற்றுக்கொள்ளலாம். மேலும், குடிநீர் இணைப்பு இல்லாத பகுதிகள் மற்றும் அழுத்தம் குறைவான பகுதிகளுக்கு குடிநீர் தொட்டிகள் மற்றும் தெரு நடைகளுக்கு லாரிகள் மூலம் வழங்கப்படும் குடிநீர் விநியோகம் எந்தவித தடையுமின்றி வழக்கம்போல் சீரான முறையில் மேற்கொள்ளப்படும். மேலும், கூடுதல் தகவல்களுக்கு 044–4567 4567 என்ற எண்ணை தொடர்பு கொள்ளலாம்.

வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு மேலாளர்,
சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும்
கழிவுநீரகற்று வாரியம்

சென்னை குடிநீர் வாரியத்தின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள

CHN_Metro_Water CMWSSB chennaimetrowater cmwssb.tn.gov.in